# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


இயேசு, “என் தந்தை அருள் கூர்ந்தால் அன்றி யாரும் என்னிடம் வர இயலாது என்று உங்களுக்குக் கூறினேன்” என்றார். அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை. இயேசு பன்னிரு சீடரிடம், “நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?” என்று கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, “ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். அதை நம்புகிறோம்” என்றார். (யோவா 6:64-69)

## வட்டார ஆயர் மன்றத்தின் பல்வேறு ஆணையங்களின் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்

**கோலாலம்பூர்:** மலேசியா-சிங்கப்பூர்-புருணைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம், அண்மையில் முடிவடைந்த அதன் மன்றக்கூட்டத்தில், நிலைத்தன்மையைக் கருத்தில் கொண்டு அதன் பொறுப்பாளர்களளின் தேர்வை நடத்தியது. இம்மன்றத்தில் பொறுப்பாளர்கள் தேர்வு ஈராண்டுக்கு ஒருமுறை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இம்முறை அனைத்து மாமறை மற்றும் மறைமாவட்டங்களும் பங்குகளும் நடப்பிலிருக்கும் தொற்று நோயோடு போராடிக் கொண்டிருக்கும் வேளையில், ஆயர்கள் மூன்று காரணங்களுக்காக வகித்து வரும் பொறுப்புகளில் மாற்றங்கள் செய்ய இணங்கவில்லை.

முதலாவதாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறிவிப்புக்கு ஏற்ப, வட்டார ஆயர்களின் மாநாடு எதிர்வரும் 17, அக்டோபர் 2021-ல் நடைபெறவுள்ளது. இரண்டாவதாக, ஆசிய ஆயர்களின் மாநாட்டின் (Federation of Asian Bishops’ Conferences) 50 ஆம் ஆண்டு நிறைவுவிழா 2022, நவம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டதில் கவனம் செலுத்துதல். இதற்காக, தல மறைமாவட்டங்கள் யாவும் எழுந்துள்ள பலவேறு பிரச்சனைகளை ஆய்ந்தறித்து, அவற்றை மேற்கொள்ள வழிவகைகளைப் பட்டியலிட்டு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

அடுத்து, மூன்றாவதாக, 2026-ல் நடைபெறவுள்ள நமது மலேசிய மேய்ப்புப்பணி மாநாடும் ஒரு காரணமாகும். இது வெறிகரமாக நடந்தேற பங்குகள், மறைமாவட்டங்கள் மற்றும் வட்டார திருஅவை ஆகியவற்றின் நடவடிக்கை தகவல்கள் சேகரிக்கப்பட்டு படைக்க வேண்டியுள்ளது.

ஆனாலும், மறைந்த கார்தினால் கொர்னலியுஸ் சிம் அவர்கள் ஏற்றிருந்த பொறுப்பிற்கு மாற்று பொறுப்பாளர் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. அவர் கடந்த காலத்தில் வட்டார விவிலிய மற்றும் சமூகத் தொலைத் தொடர்புக்குத் துறைக்குத் துணை தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். எனவே, ஆயர்கள் மேலும் சிறப்பாகப் பணியாற்ற ஆயர் மன்றம் கொண்டிருக்கும் கட்டமைப்பில் மறுபரிசீலனை செய்ய விரும்புகிறார்கள்.

இப்போது, குடும்ப நலம் மற்றும் பொதுநிலையினர் வாழ்வும் என்பது, குடும்ப நலமும் பொதுநிலையினரும் என இரு ஆணையங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன்வழி இவ்விரு ஆணையங்களும் மேலும் ஆற்றலோடு செயல்பட முடியும் என நம்பப்படுகிறது.

நிறைவாக, ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் மலேசியா-சிங்கப்பூர்-புருணைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் தலைவராக மீண்டும் தேர்வுச் செய்யப்பட்டார். துணைத்தலைவராக சிங்கப்பூரின் பேராயர் வில்லியம் கோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் மலேசிய ஆயர் மன்றத்தின் தலைவராகத் தொடர்ந்து செயலாற்றுவார்.

**அலுவலகப் பொறுப்பாளர்கள் 2021- 2023**

**நிர்வாகக் குழுவினர்**

தலைவர்: ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், பினாங்கு
துணைத்தலைவர்: பேராயர் வில்லியம் கோ, சிங்கப்பூர்
செயலாளர்: ஆயர் ரிச்சர்ட் இங், மிரி
பொருளாளர்: ஆயர் பெர்னர்ட் பவுல், மலாக்கா-ஜொகூர்
நிர்வாகச் செயலாளர்: சார்ல்ஸ் பெர்த்தில்

**ஆணையங்களுக்கான தலைவர்கள்:**

1. விவிலியம்: ஆயர் ரிச்சர்ட் இங், மிரி
2. சமூக தொலைத்தொடர்பு : பேராயர் வில்லியம் கோ, சிங்கப்பூர்
3. குடும்ப நல வாழ்வு: பேராயர் ஜோன் வோங், கோத்தா கினபாலு
4. பொதுநிலையினர்:ஆயர் ஜூலியுஸ் கிதோம், சன்டாக்கான்
5. அர்ப்பண வாழ்வு: பேராயர் வில்லியம் கோ, சிங்கப்பூர்
6. கரித்தாஸ் (அன்புப்பணி): ஆயர் பெர்னர்ட் பவுல், மலாக்கா-ஜொகூர்
7. படைப்பின் நீதி: ஆயர் ஜோசப் ஹீ- சிபு
8. புலம்பெயர்ந்தோரும் பயணிகளும் : பெர்னர்ட் பவுல், மலாக்கா-ஜொகூர்
9. மறைமாவட்ட அருள்பணியாளர்களும்- குருத்துவக் கல்லூரிகளும்– ஆயர் ரிச்சர்ட் இங், மிரி
10. கிறிஸ்தவ ஒன்றிப்பும் பிற சமய உரையாடலும்: பேராயர் ஜூலியன் லியாவ்
11. இளையோரும் உயர்கல்வி மாணவர்களும்-பேராயர் சைமன் போ,
12. திருவழிபாடு: ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்
13. திருஆட்சிப்பீட மறைத்தூது/புதுமுறை மறைத்தூது - பேராயர் சைமன் போ,
14. ஆரோக்கிய வாழ்வு: ஆயர் கொர்னிலியூ பியோங்.
15. மலேசிய மறைக்கல்வி: பேராயர் ஜூலியன் லியாவ்
16. மலேசிய கத்தோலிக்கக் கல்வி: பேராயர் ஜூலியன் லியாவ்

## ஆயர் மன்றம் அதன் வலைத்தலத்தை அறிமுகப்படுத்தியது

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம் அதன் அதிகாரப்பூர்வமான வலைத்தலத்தை கடந்த ஆகஸ்டு 13-ம் திகதி திறப்புவிழா கண்டது. அவ்வேளை, “நாங்கள் உங்களுடன் நெருங்கிய, பகிரும், செவிமடுக்கும் திருஅவையாக விளங்க விரும்புகிறோம்” என்று தலைவரான ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் திட்டமிடப்பட்ட இப்பணி இவ்வட்டார இறைமக்கள் மத்தியில் திருஅவையின் உடனிருப்பின் அடையாளகவும், ஆயர் மன்றத்தின் அனைத்து ஆணையங்களுக்கும் அலுவலகங்களுக்கும் இடமளித்து, இறைமக்கள் எளிதில் இவற்றை நாடிச் செல்ல வழிவகுக்கும் என அவர் மேலும் கூறினார். வட்டார ஆயர் மன்றத்திற்கு இது மற்றுமொரு மைல்கல்லாகும்.

Visit the website at: *https://cbcmsb.org/*




## உலக மனிதாபிமான நாளையொட்டி, கரித்தாஸ் செய்தி

**வத்திக்கான்:** பல்வேறு நெருக்கடிகள் நம்மைச் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில் நாம் கடைபிடிக்கும் உலக மனிதாபிமான நாளில், ஒருங்கிணைந்த மனிதாபிமான சூழல் ஒன்றே நமக்கு முன்னிருக்கும் ஒரே தீர்வு என்பதை அனைவரும் உணரவேண்டும் என்று அனைத்துலக கரித்தாஸ் நிறுவனம் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

ஆகஸ்ட் 19, கடந்த வியாழனன்று, உலக மனிதாபிமான நாள் சிறப்பிக்கப்படுவதையொட்டி, தன் செய்தியை வெளியிட்டுள்ள கரித்தாஸ் அமைப்பு, அண்மைய நாள்களில் மனிதர்களின் செயல்பாடுகளாலும், இயற்கைப் பேரிடர்களாலும், இவ்வுலகம்



*ஏமன் நாடு விரைவில் ஒரு பாலைநிலமாக மாறும்*

சூழப்பட்டுள்ளதை இச்செய்தியின் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் நாடு தாலிபான்களிடம் வீழ்ந்தது, 1500-க்கும் அதிகமானோரை பலிவாங்கிய ஹெயிட்டி நிலநடுக்கம் ஆகியவற்றையும், லெபனான், உக்ரைன், வெனிசுவேலா, சிரியா ஆகிய நாடுகளில் தொடர்ந்து வரும் அரசியல் நிலையற்ற தன்மை ஆகியவற்றையும், அனைத்துலக கரித்தாஸ் நிறுவனம், தன் செய்தியில் குறிப்பிட் டுள்ளது.

உலக அளவில் மீண்டும் சீரமைக்க முடியாத வண்ணம் நிகழ்ந்துவரும் காலநிலை மாற்றத்தின் பிரச்சனைகளால் அதிகரித்துவரும் புலம்பெயந்தோர் பிரச்சனை, அத்துடன், கடந்த ஓராண்டுக்கு மேலாக மனித சமுதாயத்தை வதைத்துவரும் கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் ஆகியவற்றின் விளைவுகளும், இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலக அரசுகள் ஒவ்வொன்றும், தங்கள் சொந்த நலனை முன்னிறுத்தி எடுக்கும் முடிவுகளால், உலகில் மிகவும் பின்தங்கிய நாடுகளில் வாழும் வறியோர் பல்வேறு துன்பங்களை அடைய வேண்டியிருப்பதை, ஆப்கானிஸ்தான் நமக்கு வெகுத் தெளிவாக உணர்த்தி வருகிறது என்று, கரித்தாஸ் நிறுவனம் கூறியுள்ளது.

ஏற்கனவே அரசியல் தளத்தில் மிகவும் நிலையற்ற ஒரு கட்டத்தில் இருக்கும் ஹெயிட்டி நாட்டில், இயற்கையின் சீற்றமாக நடைபெற்ற நிலநடுக்கம், மனித சமுதாயத்திற்கு ஒரு பெரும் மனிதாபிமான சவாலாக அமைந்துள்ளது என்று கரித்தாஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரத்தில் இருக்கும் அரசுத்தலைவர்கள், மிகவும் வறிய நிலையில் இருப்போரை முன்னிறுத்தி, உறுதியான அரசியல் முடிவுகளை எடுக்கவில்லையெனில், மாற்றங்கள் ஏற்படாது என்பதைக் கூறும் இச்செய்தியில், வரவிருக்கும் அரசியல் முடிவுகள் மிகவும் உறுதியாக எடுக்கப்படவேண்டும் என்ற அழைப்பும் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் புதியதொரு திட்டம் செயல்வடிவம் பெறுகிறது

கோலாலம்பூர் மாமறைமாவட்டம் அதன் வரலாற்றை எடுத்துரைக்கும் வண்ணம், சொந்த அருங்காட்சியகம் ஒன்றை (museum) ஏற்படுத்தி வருகிறது.

கடந்த 2019, ஆகஸ்டு மாதம் பெட்டாலிங் ஜெயாவிலுள்ள விண்ணேற்பு அன்னை பங்கின் மறைபரப்பு மற்றும் பிற சமயத்துடனான உரையாடல் பணிக்குழு ஏற்பாடு செய்த சமயங்களுக்கிடையிலான நல்லிணக்கக் கண்காட்சியின் போது, இந்த அருங்காட்சியகம் அமைத்தல் பற்றியச் சிந்தனை எழுந்ததாக அதன் ஏற்பாட்டாளர் ஹிலரி நார்சிஸ் மற்றும் அக்கண்காட்சியின் கண்காணிப்பாளர் ஜெனட் டீ ஆகியோர் கூறினர். அந்நிகழ்வைத் திறந்து வைத்த பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் கத்தோலிக்க அருங்காட்சியகத்தின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இப்போது அதனை ஏற்படுத்தும் பணிகளில் இறங்கியுள்ளார்.

மாமறைமாவட்டத்திற்கு ஓர் அருங்காட்சியகம் தேவையா? எனும் கேள்வி பலருக்கும் எழக்கூடும். நமக்கென்று ஒரு பாரம் பரியமும் வரலாறும் உண்டு. அது அடுத்து வரும் தலைமுறையினரோடு பகிரப்பட வேண்டும். ஓர் அருங்காட்சியகமானது அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கு மாமறைவாவட்டத்தின் இறைமக்கள் எவ்வாறு சிறந்த ஆளுமையோடு, சமூக மாக உருவாக அவர்களது நடவடிக் கைகள் ஊக்குவித்தன என்பதை விவரிக்கும் தலமாக விளங்கும்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் இருக்கும் 33 பங்குகளும் அதனதன் சொந்த ஆவணங்கள், பதிவுகள் மற்றும் கலைப்பொருள்களைப் பாதுகாக்க வேண்டும். ஒருசில பங்குகள், மாமறைமாவட்டத்தைவிட பழமை வாய்ந்தனவாக உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அவற்றின் பண்டையப் பொருள்களும் உறுதியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த அருங்காட்சியகம் இத்தகைய அனைத்து பொருள்களையும், ஆவணங்களையும் கலைப்பொருள்களையும் சேகரித்து, காட்சிக்கு வைக்கும் மறைமாவட்டத் திற்கான சிறந்த தலமாக விளங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய அருங்காட்சியகத்தை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. ஜெனட் டீ அவர்களின் கண்காணிப்பில் இதற்கான ஓர் அலுவலகமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிர்வாகக் குழு உறுப்பினர்களான பாலா லோரன்ஸ், ஜ்வே சான் மற்றும் ஹிலரி நர்சிஸ் ஆகியோர் முறையே கலைப் பொருள்கள் மற்றும் கண்காட்சிக்கான பண்டைய பொருள்கள், ஆவணங்கள் சேகரிப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறார்கள். அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்கள் இக்குழுவிற்கான ஆலோசகராகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அருங்காட்சியகத்திற்கான ஏற்ற ஓர் இடமும் தேர்வுச் செய்யப்பட்டுள்ளது. கோலாலம்பூர், புக்கிட் நானாஸ் சாலையில் அமைந்துள்ள, 130 ஆண்டு கால பழமை வாய்ந்த புனித ஜோன் பேராலயம் வளாகத்தில் உள்ள ஒரு கட்டடம் அதுவாகும். இது மாநகரின் பழமையும் பாரம்பரியமும் கொண்ட ஒரு கட்டடமாக உள்ளதென்பது இதன் தனிச் சிறப்பு. மேலும் மாநகரின் மையத்தில், அனைவரும் இலகுவாக வந்துப்போகும் தலமாக உள்ளதாலும் இந்த கட்டடம் தேர்வுச் செய்யப்பட்டது. இந்த கட்டடத்தில் தற்போது பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் நிறைவடைய ஏறக்குறைய ஒரு வருட காலம் ஆகலாம் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இக்கட்டடம் ஓர் அருங்காட்சியகமாக சீரமைக்கப்பட்டபின், பங்குகள் தோறும் உள்ள பண்டையப் பொருள்கள், ஆவணங்கள் மற்றும் கலைபொருள்கள் சேகரிக்கப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்படும். இதன்வழி, இக்காட்சியகமானது நமது கத்தோலிக்கத் திருஅவையையொட்டிய கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பழங்கால கதைகளைக் கூறும் மற்றும் வரலாறு ஆய்வாளர்களின் மையமாகவும் இது திகழும் என்பதில் ஐயமில்லை.



அடுத்து, இந்த அருங்காட்சியகம் செயல்படத் துவங்கியதும், பொது மக்களின் வருகைக்குத் திறந்துவிடப்படவுள்ளது. இதன்வழி இது மறைபரப்புக்கான ஒரு மூலமாவும் பிற சமயத்தாருடனான உரையாடலுக்கு அத்தியாவசியமான மையமாகவும் திகழும். அத்தோடு, நமக்கான அறிவுக் களஞ்சியமாக விளங்கும். அதே வேளையில், இந்த அருங்காட்சியகமானது நம்மை கடந்த கால வரலாற்றுக்கு இட்டுச் செல்வதோடு, நமது முன்னோர்களின் அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளும் வாய்ப்பினையும் வழங்கும்.

இந்த அருங்காட்சி மையத்தைச் சீர்செய்து வரும் நிர்வாகக் குழுவினர் இதனையொட்டிய உங்களது கருத்துக்களையும் அறிய விரும்புகின்றனர். ஆலோசனைகள் மற்றும் கருத்துப் பகிர்வுகள் இருப்பின் கீழ்க்கண்ட மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

klcatholicmuseum@archkl.org.

# காஜாங், திருக்குடும்பப் பங்கில் மறைக்கல்வி விழா

காஜாங்: இங்கு அமைந்துள்ள திருக்குடும்பப் பங்கு ஆலயத்தில், பங்குத்தந்தை என்ரூ கூய் மற்றும் துணைப் பங்குத்தந்தை வின்சன் தோமஸ் ஆகியோரின் ஆதரவில் மறைக்கல்வி மற்றும் விவிலியப் பணிகுழுக்கள் இணைந்து மறைக்கல்வி மாணவர்களுக்காக இயங்கலை வாயிலாக நான்கு வார நிகழ்ச்சியொன்றை நடத்தினர்.

"இறைவார்த்தை கிறிஸ்தவ வாழ்வின் ஒளி" என்ற மையக்கருத்தின் வழி பல நிகழ்ச்சிகள் அரங்கேற்றம் கண்டன. இது முதன்முறையாக இயங்கலை (zoom) வாயிலாக நடைப்பெற்ற நிகழ்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. போட்டி நிகழ்ச்சிகளாக ஏற்பாடு செய்யப்பட்ட இது, கடந்த ஜூலை மாதத்தின் நான்கு வாரங்களிலும் தொடக்கப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி மறைக்கல்வி மாணவர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முதல் வாரம் தொடக்கப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி மறைக்கல்வி மாணவர்களுக்கான விழிப்புணர்ச்சி சொற்பொழிவுகள் ‘இறைவார்த்தையின் பயன்பாடு" என்ற தலைப்பினைக் கொண்டு காலை மதியம் என இரு பகுதியாக நடைபெற்றது.

தொடர்ந்து இரண்டாவது வாரத்தில் மறைக்கல்வி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதலும் படம் வரைதலும் மற்றும் கட்டுரை எழுதுதலோடு ‘அனுதினமும் இறைவார்த்தை வாசிப்பதினால் ஏற்படும் நன்மைகள், ‘நான் ஏன் கத்தோலிக்க திருஅவையில் தொடர்ந்து வாழ விரும்புகிறேன்’ எனற தலைப்பையொட்டி பேச்சுப் போட்டிகளும் நடைப்பெற்றன.

மூன்றாம் வாரத்தில் காலை கதை சொல்லும் போட்டியில் தொடக்கப்பள்ளி மறைக்கல்வி மாணவர்கள் ‘நல்ல சமாரியன், இயேசுவின் பிறப்பு" பற்றிய கதைகளைத் திறம்பட கூறினார்கள். மதியம் இடைநிலைப்பபள்ளி மறைக்கல்வி மாணவர்களுக்கான வினாவிடை போட்டி நடைப்பெற்றது.

நான்காவது வாரம் தொடக்கப்பள்ளி இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி "இயேசுவின் உவமைகள், உன்னை அன்பு செய்வதுபோல் பிறரையும் அன்பு செய்" எனும் தலைப்புகளின் அடிப்படையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பான முறையில் நடைபெற உதவிய அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மறைக்கல்வி மாணவர்கள், உதவியாளர்கள், தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழு மற்றும் பங்குத் தந்தையர்களுக்கும் நன்றி நவிலப்பட்டது.

*-திருமதி மலர்விழி தோமஸ்*

# நற்கருணை நிலைவாழ்வின் ஊற்று

இன்று கடவுளாகிய ஆண்டவர் யாரைக் கடவுளாக தேர்வு செய்வது என்ற முடிவை நம்மிடமே விட்டு விடுகிறார். "...யாருக்கு ஊழியம் செய்வீர்கள் என்பதை நீங்களே இப்போது முடிவு செய்யுங்கள் என முதல் வாசகத்தில் யோசுவா தமது மக்களைப் பார்த்துக் கேட்கின்றார் (யோசுவா 24:15).

இயேசுவும் இன்றைய நற்செய்தியில் தமது சீடர்களைப் பார்த்து தம்மைப் பின்பற்றும் முடிவை அவர்களிடம் விட்டு விடுகிறார். மக்கள் முடிவு செய்வதற்கு முன்னர் கடவுளாகிய ஆண்டவர் செய்த அனைத்தையும் வரிசைப்படுத்திக் காட்டுகிறார் யோசுவா. அதே போல இயேசுவும் "நீங்களும் போய் விட நினைக்கிறீர்களா?" (யோவான் 6:67) எனக் கேட்கிறார்.

ஏனெனில் "எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன்" (யோவான் 6:51) என இயேசு கூறியதை ஏற்க முடியாத சீடர்கள் பிரிந்துப் போக நினைக்கிறார்கள். நற்கருணைப் பற்றிய இயேசுவின் போதனை ஏற்றுக்கொள் வதற்கு மிகவும் கடினமான ஒன்று என்று பலச் சீடர்கள் எண்ணினார்கள். இதைவிடக் கடினமான ஒன்று உள்ளது என இயேசு கூறுகிறார். அது மானிடமகன் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச்செல்வதைக் காண்பது (6:62). இக்கருத்து அவர்களின் அறிவுக்கும் வாழ்வியலுக்கும் அப்பாற்பட்டது. மாறாக இது நம்பிக்கை தொடர்பானது. "கிறிஸ்துவே திருஅவையாகிய உடலின் மீட்பர்" (எபே 5:23) என்ற உண்மையான நம்பிக்கை கொண்ட சீடர்களோடு நீங்களும் நானும் இதை ஏற்றுக் கொண்டுள்ளோம். நற்கருணையை தகுதியின்றி உண்டால் நம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்வோம் (1கொரி 11:29) என புனித பவுல் எச்சரிக்கிறார்.

நற்கருணை என்பது அன்றும் இன்றும் எல்லா நிலையில் உள்ளவர்களுக்கும் சவாலாகவே உள்ளது. நற்கருணை குறித்த நம்பிக்கை தியாக-அன்பு வாழ்வைப் பிரதிபலிக்கிறது. பொதுநிலையினராகிய நமக்கு மட்டுமல்ல அர்ப்பண வாழ்வு கொண்ட துறவறத்தாருக்கும் சவாலாக உள்ளது. இந்த சவாலைச் சமாளிக்க "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" (யோவான் 6:68) என்று புனித பேதுரு அறிக்கையிடுவதில் நாமும் சேர்ந்து கொள்வோம். நற்கருணை மீது கொள்ளும் நம்பிக்கை நமது வாழ்வில் ஒன்றர கலந்திருக்க வேண்டும். அதற்கு உதாரணமாக கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும்; கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான அன்பு, நம்பிக்கை உறவை (எபே 5:21-32) இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் எடுத்துக்காட்டுகிறார்.

தொடக்கத்தில் பன்னிரு சீடர்களில் ஒருவராக இல்லாமல், இயேசுவின் போதனை நேரடியாக கேட்காமல், அவரோடு வாழாமல், பயணம் செய்யாமல், இறுதி இராவுணவில் கலந்து கொள்ளாமல், நற்கருணையைப் பற்றி இதர திருத்தூதர்கள் சொல்லாத மறையுண்மைகளை (1கொரி 11ம் அதிகாரம்) நமக்கு விட்டுச்சென்ற புனித பவுல் நாடுதோறும் அலைந்து போதித்த புறவினத்தார் மத்தியில் நாமும் உள்ளோம் என்பது பெருமையே. நற்கருணையின் உண்மையையும் ஆழத்தையும் அகலத்தையும் ஏற்றுக்கொள்ளும் மக்களாக நாம் இருந்தால் அதன் சவால்களையும் ஏற்றுக்கொள்வோம். "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்?" என்று கூறிய புனித பேதுருவைப் போல் தம்மையே நமக்காகவும் நமது தலைமுறைக்காகவும் அர்ப்பணித்த இயேசுவுக்கு நம்மை அர்ப்பணிப்போம். நற்கருணையை ஆராதிப்போம்! ஏனெனில் நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக உள்ளது (2ம் வத். எண் 11)

*(எட்மண்ட் பல்தசார், செராஸ்*

**பொதுக்காலம் 21-ஆம் ஞாயிறு**

முதல் வாசகம்: யோசு 24:1-2a,15-17, 18b
தி.பாடல்: 34: 1-2.15-16.17-18.19-20. 21-22
2ம் வாசகம்: எபே 5: 21-32
நற்செய்தி: யோவா 6: 60-69

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 1**